

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 –வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க கூட்டம் நெற்குணம் ஊராட்சியில் ஒன்றிய அமைப்பாளர் லோகநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட அமைப்பாளர் யுவராஜ், ஒன்றிய செயலாளர் ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் குணசேகரன், ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் புருஷோத்தமன், ஆண்டோ, யுவராஜ் , இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மாரிமுத்து, ராமமூர்த்தி, வடிவேல் முருகன், பழனி, சத்தியசீலன், சூரியகுமார், ஒன்றிய நிர்வாகிகள் வெங்கட கிருஷ்ண, வெங்கடகிருஷ்ணன், தனசேகரன், நாகப்பன், குமுதா மதுரை, செல்வம், வேதாசலம், ஜெய கண்ணன், ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் வில்லிவாக்கம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டம் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் பகுதிச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., டிஎஸ்பி ராஜகோபால், எம்.சி, எம் டிஆர் நாகராஜ், வேஙவாசு கூஙபீ. ஜெயின் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.ராசா, எம்.பி ஆலோசனை வழங்கினார். உடன் ப.ரங்கநாதன் பி.கே. மூர்த்தி, ஒ.ஏ.நாகலிங்கம், சன்.பி.முனியாண்டி, வானவில் விஜய், சாவித்ரி வீரராகவன் சுதா தீனதயாளன், டிவி செம்மொழி, ாக்டர்.ஜி சாந்தகுமாரி, எல்.பி.எப். மோகன், நீலகண்டன், ஜி.வி. நாகவள்ளி. எம் சி. டாக்டர். ஏ.பி. பூர்ணிமா. எம் சி. து.ஆயிரம் கு.கிருஷ்ணமூர்த்தி ஜெ. பாலமுருகன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,பி எல் ஏ 2 க்கள் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் விளக்கக்கூட்டம்!



### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மதுரை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்த பாக முகவர்கள் (BLA –2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA – IT WING) செயல் விளக்கக்கூட்டம் :-

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 28.06.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி மாலை 05.00 மணி | மதுரை கிழக்கு மேலூர் | குறிஞ்சி மஹால், திருப்பாலை மூவேந்தர் பண்பாட்டு கழகம், மேலூர் |
| 29.06.2025 ஞாயிற்றுக் கிழமை | காலை 10.00 மணி மாலை 05.00 மணி | சோழவந்தான் மதுரை மேற்கு | சுபிக் ஷா திருமண மஹால் எல்.எம்.ஆர் திருமண மஹால், டி.பி.கே. மெயின் ரோடு, பழங்காநத்தம் |

இந்நிகழ்வில் தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட, கழக செயலாளர்கள், அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்..

பொருள் :
- “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்து,
- கழக ஆக்க பணிகள்

**அமைச்சர் பி.மூர்த்தி**
செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

## நாமக்கல் கிழக்கு மாவட்டம்

# ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர்களுக்கு பயிற்சிக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி.,அறிவிப்பு!

*நாமக்கல், ஜுன் 27 -*

கழகதலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க “ஓரணியில் தமிழ்நாடு ”நாமக்கல் கிழக்கு மாவட்டம் ஒன்றியம், நகரம், பேரூர்வாரி யாகதகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர்களுக்கு (Booth Digital Agent)மற்றும்BLA 2 பயிற்சிகூட்டம் 27.06.2025 29.06.2025 வரைநடைபெறும்விவரம்.

தொகுதி : நாமக்கல் சட்டமன்றதொகுதி,

27.06.2025 / மாலை 05.00 மணி,நாமக்கல் கிழக்கு நகரம், நாமக்கல் மேற்கு நகரம்,

நாமக்கல் தெற்கு நகரம் நாமக்கல்நகராட்சிமண்டபம்

28.06.2025 / மாலை05.00 மணி, மோகனூர் கிழக்கு ஒன்றியம் ,மோகனூர் பேரூர் - சர்மி மஹால், மோகனூர்.

29.06.2025 காலை 10.00 மணி, நாமக்கல் ஒன்றியம் - நாமக்கல்மாவட்ட அலுவலகம்.

29.06.2025 மாலை 05.00 மணி - புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியம், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியம் - செல்வலட்சுமி திருமணமண்டபம்.

தொகுதி : சேந்தமங்கலம் சட்டமன்றதொகுதி

28.06.2025 காலை 10.00 மணி - கொல்லிமலை ஒன்றியம் - செம்மேடு அரசு குடியிருப்பு

28.06.2025 மாலை 06.00 மணி - சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் பேரூர், காளப்ப நாயக்கன்பட்டி பேரூர் - கலைவாணி மண்டபம், துத்திக்குளம்.



29.06.2025 காலை 10.00 மணி - எருமப்பட்டி ஒன்றியம், எருமப்பட்டி பேரூர் - அய்யா மஹால், எருமப்பட்டி.

தொகுதி : இராசிபுரம் சட்டமன்ற தொகுதி

27.06.2025 காலை 10.00 மணி - இராசிபுரம் நகரம் - சட்டமன்ற அலுவலகம், இராசிபுரம்.

27.06.2025 மாலை 03.00 மணி - நாமகிரிப்பேட்டை ஒன்றியம், புதுப்பட்டி பேரூர், நாமகிரிப்பேட்டை பேரூர், சீராப்பள்ளி பேரூர் - வாசகி மஹால், நாமகிரிப்பேட்டை.

28.06.2025 மாலை 03.00 மணி -வெண்ணந்தூர் ஒன்றியம், வெண்ணந்தூர் பேரூர், அத்தனூர்பேரூர் - ஸ்ரீவாரிமஹால், மசாக்காளிப்பட்டி.

29.06.2025 - மாலை 05.00 மணி - இராசிபுரம் ஒன்றியம், பட்டணம் பேரூர், பிள்ளாநல்லூர் பேரூர் - பால மணி மண்டபம், முத்துகாளிப்பட்டி.

குறிப்பு: இப்பயிற்சிக்கு பாகதகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் (Booth Digital Agent) மற்றும்BLA 2 அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். அதை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் உறுதிசெய்து கொள்ளவேண்டும். ஓரணியில் உறுப்பினர் சேர்க்கை தலைமை கழகத்தால் கூர்ந்து கண்காணிக்கப்படுகிறது. மேற்கண்ட பயிற்சியில் தலைமைக் கழகத்தால் பயற்சி பெற்ற C.மகேஷ் (நாமக்கல் தொகுதி), S.பூபதி (சேந்தமங்கலம்தொகுதி), P.காந்தி(இராசிபுரம்தொகுதி) ஆகியோர் செயலி பயிற்சி அளிக்கிறார்கள். இப்பயிற்சியில் பங்கு பெற்றால்தான் “ஓரணியில்தமிழ்நாடு” செயலியில் உறுப்பினர் சேர்க்கைகற்றுக் கொள்ளமுடியும். மேலும் இப் பணியினை சிறப்பாக வெற்றி அடையமுடியும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சானடோரியம் பகுதியில் ரூ.43.40 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் தாம்பரம் மாநகராட்சியின் புதிய அலுவலக கட்டடத்திற்கான பணியினை மேயர் க. வசந்தகுமாரி மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், நேரில் சென்று பார்வையிட்டு கட்டிடத்திற்கான சிமெண்ட் கலவை மற்றும் கட்டுமான பொருட்களின் உறுதி தன்மையையும் ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் ஆலோசனைகளை வழங்கினார்கள் உடன் அதிகாரிகள் ஊழியர்கள் இருந்தனர்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக பாக நிலை உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம்!



### மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்டம், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஓரணியில் தமிழ்நாடு என்னும் முன்னெடுப்பின் படி பாகம் வாரியாக கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்தல் பணிகள் குறித்து பாக நிலை உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாக வாரியாக கீழ்கண்ட அட்டவணையின் படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | கழக நிர்வாகம் | செயலாளர்கள் | இடம் |
|---|---|---|---|---|
| 28.06.2025 | மதியம் 2 மணி | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு | CMR மண்டபம், கூடப்பாக்கம் |
| 28.06.2025 | மாலை 4 மணி | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப ச கமலேஷ் | கஸ்தூரி மஹால், சென்னீர்குப்பம் |
| 28.06.2025 | மாலை 5 மணி | பூவிருந்தவல்லி நகரம் | G.R.திருமலை | சீனிவாசா திருமண மண்டபம் |
| 28.06.2025 | மாலை 6 மணி | திருமழிசை பேரூர் | தி.வே.முனுசாமி | அண்ணா சமுதாயக் கூடம், திருமழிசை |
| 29.06.2025 | காலை 8 மணி | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | முரளி கிருஷ்ணன் | APK மஹால், ஈக்காடு |
| 29.06.2025 | காலை 9 மணி | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம்ஆனந்த் | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், கந்தன் கொல்லை |
| 29.06.2025 | காலை 9 மணி | ஆவடி தெற்கு பகுதி | ஜி.ராஜேந்திரன் | முல்லை மண்டபம், ஆவடி |
| 29.06.2025 | காலை 10 மணி | ஆவடி வடக்கு பகுதி | ஜி.நாராயண பிரசாத் | ஜெய கிருஸ், பட்டாபிராம் |
| 29.06.2025 | காலை 10 மணி | திருவேற்காடு நகரம் | NEK மூர்த்தி | கெஜலட்சுமி திருமண மண்டபம், திருவேற்காடு |
| 29.06.2025 | காலை 11 மணி | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர்.ஜெயசீலன் | லட்சுமி மஹால், காக்களூர் |
| 29.06.2025 | மதியம் 12 மணி | ஆவடி மேற்கு பகுதி | பொன் விஜியன் | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், பட்டாபிராம் |
| 29.06.2025 | மாலை 3 மணி | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | தாட்சாயணி மண்டபம், தாமரைப்பாக்கம் |
| 29.06.2025 | மாலை 3 மணி | ஆவடி கிழக்கு பகுதி | பேபி சேகர் | ஈஸ்வரி மஹால், சோழம்பேடு |
| 29.06.2025 | மாலை 5 மணி | திருநின்றவூர் நகரம் | தி.வை.இரவி | DSM மண்டபம், திருநின்றவூர் |

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் மா. ராஜி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். அதுசமயம் தொகுதி பார்வையாளர்களான ஆவடி தொகுதிக்கு, மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் செல்வி நிவேதா ஜெசிகா, பூவிருந்தவல்லி தொகுதிக்கு மாநில தொழிலாளர் அணி செயலாளர் PTC செல்வராஜ், ஆகியோர் இக்கூட்டத்தில் தொகுதி வாரியாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

## எழும்பூர் தொகுதியில்

# புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்கும் சிறப்பு முகாம்!

### எழும்பூர் தொகுதி மக்கள் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*சென்னை, ஜுன் 27 -*

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை மக்களுடைய நலனுக்காகக் கொண்டுவந்து நிறைவேற்றி வருகிறோம். அவ்வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் வழிகாட்டுதலோடு எனது



எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், அவர்கள் தமக்குப் பயன ளிக்கக்கூடிய திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளு வதற்கும் “Connect with MLA” என்றொரு தனிச்சிறப்பான திட்டத்தை முன்னெடுத்திரு ந்தோம்.

இத்திட்டத்தின் கீழ் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி ஏப்ரல் மாதம் வரையில் எனது சார்பில் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த ஏறத்தாழ 29,000 குடும்பங்களை நேரில் சந்தித்து, அரசின் எந்தெந்த திட்டங்களின் கீழ் அக்குடும்பங்கள் பயன் அடைந்திருக்கின்றன மற்றும் அவர்களது தேவைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து வகைப்படுத்தினோம். இப்பிரச்சாரத்தின்போது பொது மக்கள் அரசின் திட்ட ங்களால் பயனடைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தி யிருந்ததோடு, தமது தேவைகளையும் கூறினார்கள். குறிப்பாக, பல குடும்பங்கள் தமக்குக் குடும்ப அட்டை தேவை எனக் கோரிக்கை வைத்திருந்தனர்.

இக்குடும்பங்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தரும் விதத்தில், எனது ஏற்பா ட்டில், எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டை இல்லாத குடும்பங்கள் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப் பிக்கும் சிறப்பு முகாமொன்று எதிர்வரும் 28.06. 2025, சனிக்கி ழமை காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரையில் சென்னைபுரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலை யில், பழைய தாஸ பிரகாஷ் ஹோட்டல் அருகிலுள்ள தர்மபிரகாஷ் திருமண மண்ட பத்தில் நடைபெற உள்ளது. இச்சிறப்பு முகாமில் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தல் மற்றும் பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட சேவைகளை வழங்க விருக்கிறோம்.

எனவே, எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த புதிய குடும்ப அட்டை தேவைப்ப டும் குடும்பங்களும், தமது குடும்ப அட்டையில் பெயர் நீக்க மற்றும் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க விரும்புவோரும் ஆதார் அட்டை, எரிவாயு இணைப்பு ரசீது உள்ளிட்ட உரிய சான்றாவணங்களோடு இம்முகாமில் கலந்துகொண்டு பயனடைய வேண்டுமெனக் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.



வேளச்சேரி மேற்கு பகுதி 176வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே. ஆனந்தம் 176வது வார்டுக்குட்பட்ட லட்சுமி நகரில் உள்ள 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 2வது குறுக்கு தெரு மற்றும் 3வது தெரு, 4வது தெரு மற்றும் 4வது குறுக்கு தெரு, 5வது தெரு, ராஜீவ் நகர் நேரு தெரு, ராஜீவ் நகர் விக்னேஷ் சாலை மற்றும் வெங்கடேஷ்வரா நகர் 1வது தெருவில் சாலை, மழைநீர் வடிகால், மின்சாரம், தெருவிளக்கு, கழிவுநீர், சுகாதாரம் தொடர்பான கோரிக்கைகளை பொதுமக்களின் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அதிகாரிகள், மின்சாரம், குடிநீர், சுகாதாரம், தெருவிளக்கு ஆகிய துறைகளின் அதிகாரிகள், ஊழியர்கள், திரளான கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இராயபுரம் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட 50அ வது வட்டம் கிழக்கு மாதா கோயில் அருகில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. மழைக்காலங்களில் மழைநீர் நிற்காத வகையில் முன்னெச்சரிக்கையாக மழை நீர் வடிகால் அமைக்கும் பணியை துவக்கி வைத்தார். உடன் 50வது வட்டம் மாமன்ற உறுப்பினர்கள் ஆர்.சுரேஷ்குமார் அவர்கள், வட்ட செயலாளர் கிருஷ்ணன் மேனகா சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி ஆ.பாளையம் மாரடைப்பால் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் அருகில் மாவட்ட அமைத்தலைவர் மு.பகலவன், கே.சுப்பிரமணி, நிலவழகன், ஜி.ரவிக்குமார், ஞாயிறு வே.ஆனந்தகுமார், நா.மோகன்ராஜ், பா.து.தமிழரசன், மணிமாறன், அலவி, திருமலை, கணிமுத்து, உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்